**அதுரலிய பிரதேச சபை**

**மாத்தறை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதுரலிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------

மீளாய்வாண்டிக்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கம் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கருதுகோள்கள் பற்றிய குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது களஞ்சியப் பொருட்கள் மற்றும் பண்டங்கள் பெறுவனவுகள் மற்றும் வழங்கல்களுக்காக உரிய படிவங்கள் பயன்படுத்தப்பட்டு செலவுப் பகுப்பாய்வு ஒன்றின் மூலம் தொடர்புடைய செலவுத் தலைப்புகளுக்கு வரவு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பேரேட்டின் ஆரம்ப இருப்புடன் கொள்வனவுகளை கூட்டி இறுதி இருப்பு சீராக்கல் செய்யப்பட்ட பின்னர் காணப்படும் வித்தியாசம் வருமானச் செலவு கணக்கில் செலவு என ரூபா 1,814,499 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆண்டின் போது பிரதேச சபைக்கு நன்கொடை ஒன்றாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(இ) அதுரலிய தன்ஹேன பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கான மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 250,000 இற்கான தொகையை ரூபா 25,000 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ரூபா 225,000 தொகையினால் மூலதன கடன்பட்டோர் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,700 தொகை பெறுமதியான கொள்வனவுகள் மூலதன செலவு என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) 2014 செப்டம்பர் 01 திகதி சபையின் இலக்கம் PF 4507 கொண்ட கப் வண்டியின் ஆசனங்களை குஷன் செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 177,900 இற்கான செலவு மூலதன செலவுகள் என கணக்கீடு செய்யப்படாமல் மீண்டுவரும் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பராமரிப்பு விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,000,000 இற்கான தொகை ஒன்று கிடைக்கப்பட்டு மீண்டுவரும் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பணத்தினால் டிரக்டர் டேலர் ஒன்றிற்காக ரூபா 500,000 தொகை செலவுகள் மேற்கொள்வதனை இலக்காக கொண்டிருந்ததுடன் அதற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட செலவுத் தலைப்புகளிடையே மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மூன்று கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகளின் கூட்டுத்தொகை நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 743,565 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடு/ பட்டோலைகளின் பிரகாரம் அவை ரூபா 725,809 என்பதினால் வித்தியாசம் ரூபா 17,756 ஆகும்.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாக செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ஆதனக் கடனுக்கான வங்கிக் கடன் வட்டி சதவீதம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4.2 வட்டி வீதத்திற்கு இடையே வித்தியாசத்தை அரசினால் மீளளிப்பு செய்ய வேண்டும். எவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவ்வாறு மீளளிப்பு செய்யப்படாத தொகை ரூபா 223,023 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,900 ஆகும்.

(இ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 283,888 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 19,761,646 பெறுமதியான சொத்துக்களும், ரூபா 3,878,685 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் தொடர்பாக சொத்துக்கள் கணிப்பீட்டு

சபை அறிக்கைகள் மற்றும் முறையான பட்டோலைகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) விதி 218 | சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் வதிவதற்கு எடுக்கப்படும் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் கணிப்பீடு மேற்கொள்வதற்காக தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,229,520 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 167,516 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,074 | 1,364 | 548 |
| வாடகை | 2,488 | 2,131 | 118 |
| ஏனைய வருமானங்கள் | 17,015 | 21,958 | 3,997 |

2.2.2 வீத வரி

-----------------

மீளாய்வாண்டிற்கான வீத வரி பில்போடப்பட்டவை ரூபா 665,764 ஆக காணப்பட்டதுடன் 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 452,770 ஆகும். நடைமுறை ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகளில் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 310,673 ஆக காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 46 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் இவ் வருடத்தில் கிடைத்த தொகை ரூபா 287,744 ஆகக் காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 63 ஆகும். இதன் பிரகாரம் 2006 ஆண்டு முதல் வருடாந்த வீத வரி பில்போடப்பட்டவைகளில் அவ் வருடத்தில் அறவிடப்பட்டுள்ளது நூற்றிற்கு 50 சதவீதமாகும் என அவதானிக்கப்பட்டது.

2.2.3 ஏக்கர் வரி

-----------------

மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி பில் போடப்பட்டவைகள் ரூபா 12,307 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 35,154 ஆகும். 2014 ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகளில் ஆண்டின் போது பெற்றவை ரூபா 3,722 ஆக காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 30 ஆகும். 2014 ஆண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் இவ்வாண்டில் கிடைத்த தொகை ரூபா 392 ஆக காணப்பட்டதுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 01 ஆகிய சிறிய பெறுமதி ஒன்றென அவதானிக்கப்பட்டது.

2.2.4 வாடகை

----------------

மீளாய்வாண்டின் போது உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை செலுத்தாத வாடகையாளர்கள் பத்து பேர்களிடம் ரூபா 78,402 தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த தொகை கீழே தரப்பட்டுள்ளது.

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதி மன்றத் தண்டப் பணம் | 72,500 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 3,878,685 |

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 வருமானச் செயலாற்றுகை

------------------------------------------

2007 ஆண்டுடன் நேரொப்ப 2013 ஆண்டின் போது வருமான அதிகரிப்பு நூற்றிற்கு 72 ஆக காணப்பட்ட போதிலும் அதற்கு நேரொப்ப அக் காலப் பகுதியில் செலவுகளில் அதிகரிப்பு நூற்றிற்கு 112 ஆகும். சபையினால் வருடாந்த உருவாக்கும் வருமானம் சபையின் செலவுகளை தீர்ப்பதற்காக போதியளவினதான காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பப்படும் மீளளிப்புக்களை

பயன்படுத்தி சபை செலவுகளை தீர்த்துள்ளது. கடந்த 07 வருட காலப் பகுதியில் புதிய வருமான மூலங்கள் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

3.2.1 வீதி விளக்குகள் பராமரிப்பு

----------------------------------------

மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 81,677 தொகை ஒன்றும் வீதி விளக்கு பராமரிப்பாளர் படியாக ரூபா 60,000 ஆக மொத்தம் ரூபா 141,677 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளின் எண்ணிக்கை 57 எனினும் வீதி விளக்குப் பெயர் பதிவேட்டின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் 457 வீதி விளக்குகள் பராமரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வீதி விளக்குப் பராமரிப்புக்காக 2012 ஆண்டிற்கு முன்னர் ரூபா 28,581 தொகையும், மீளாய்வாண்டின் போது ரூபா 3,804 தொகையும், இலங்கை மின்சார சபையில் இருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

(இ) மின் சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 மற்றும் இலக்கம் பீஈ/01/01 கொண்ட சுற்று நிருபத்தின் பந்தி 1.4 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பராமரிக்கும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் விளக்குகள் பொருத்தும் போது வீதி விளக்குகளில் மின் நுகர்வுகள் தொடர்பாக பிரதேசத்தின் வீடுகள் மற்றும் பொதுத் தேவைகள் சில்லறை நுகர்வோர் நூற்றிற்கு 03 ஆக வரையறுக்கப்பட வேண்டும். எனினும் சபை இவ் வருடத்தில் அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

3.3 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபைக்கு சொந்தமான பாதைகளை வர்த்தமானியில் பிரசுரித்து பகிரங்கப்படுத்த வேண்டும். எனினும் 2007 ஆண்டின் பின்னர் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.

3.4 மனித வள முகாமைத்துவம்

------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 01 | 01 | - | - |
| மூன்றாம் தரம் | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தரம் | 17 | 16 | 01 | |
| ஆரம்ப தரம் | 21 | 22 | 01 | 01 |
| ஏனைய | - | 03 | - | 03 |
| | 40 | 44 | 02 | 05 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரினால் பதவியணிச் சம்பளம் மற்றும் சபை அமர்வுப் படி என ரூபா 12,145,229 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் ஆண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 14,419,134 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 2,273,905 இற்கான மேலதிகச் செலவுப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்டிருக்காத பிரதியீட்டு சுகாதார தொழிலாளர் பதவியொன்றிற்கு மற்றும் 2 காவலாளி பதவிகளுக்கு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 1,069,824 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைக்கு வேலைகள் நிருவாகி பதவி ஒன்று அங்கீகரிக்கப்படாத போதிலும் 2008 மே மாதம் முதல் அப் பதவிக்காக ஊழியர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2008 மே மாதம் முதல் 2014 திசெம்பர் மாதம் வரை கூட்டுத்தொகை ரூபா 1,855,837 தொகை ஒன்று சம்பளங்கள் மற்றும் படிகளாக சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுமையும்

-----------------------------------------------------------------

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

----------------------------------------------------------------------

சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் இடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டுள்ளமையால் சபையின் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) களஞ்சிய நிருவாகம்

(ஊ) மனித வள முகாமைத்துவம்